**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 31.12.2018–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : **31.12.2018** இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சியில் தூய்மை பாரதத் திட்டத்தின்கீழ் தட்டான்குட்டை உரக்கிடங்கில் குவித்து வைக்கப்பட்டுள்ள குப்பைகளை Bio Mining முறையில் அகற்ற, சென்னை, அண்ணா பல்கலைக் கழக சுற்றுச்சூழல் பிரிவு இயக்குநர் ஆய்வுக் கட்டணம் `. 177000/– (GST 18% உட்பட) செலுத்தவும், மேலும், திட்டப் பணிகள் முழுமைக்கும், அண்ணா பல்கலைக் கழக ஆய்வாளர்களது பயண செலவினங்கள் உள்ளிட்ட செலவினங்களை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஆய்வுக் கட்டணம் `. 177000/– செலுத்தியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) இதர பயண செலவினங்கள் செலுத்தவும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/1899/18)

**தீர்மானம் எண். 474**

அனுமதிக்கப்பட்டது

(2) இராசிபுரம் நகராட்சி வ.உ.சி. நகர் மேல்நிலைத் தொட்டி மற்றும் புதிய பேருந்து நிலைய மேல்நிலைத் தொட்டி ஆகிய இரண்டு இடங்களில் Spot Chlorination (குளோரின் திரவமேற்றுதல்) மோட்டார்கள் புதியதாக வாங்கி பொருத்த ஆகும் மதிப்பீடு `. 560000/– பணிக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/3103/18)

**தீர்மானம் எண். 475**

அனுமதிக்கப்பட்டது

(3) இராசிபுரம் நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டம் `. **1560.00** இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு திட்ட நிதி ஒதுக்கீட்டின்படி இரண்டு சிப்பங்களாக கீழ்கண்டவாறு பணிகள் மேற்க்கொள்ளப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | சிப்பம்–1 குடிநீர் விநியோகத் திட்டத்தில் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளும் பணி. | `. 1283.00 இலட்சம் |

| | | |
|---|---|---|
| 2. | சிப்பம்–2 குடிநீர் விநியோகத் திட்டத்தினை கண்காணித்து கட்டுப்படுத்தி கையாளுதல் பணி (SCADA Arrangements) | 277.00 இலட்சம் |
| | **மொத்தம்** | **1560.00 இலட்சம்** |

மேற்கண்டப் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு காணும் தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெற்று மூன்றவது ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் 15.10.2014–இல் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதில் M/s. சத்வா இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட், சென்னை எனும் ஒப்பந்ததாரரால் 9.90% மதிப்பீட்டினைவிட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளியினை நகர்மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஒப்பந்ததாரருக்கு 18.02.2015 தேதியில் பணியாணை வழங்கப்பட்டது.

சிப்பம் 1–ற்கான பணியில் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் கீழ்க்குறிப்பிட்டுள்ள பணிகள் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1) பழுதடைந்துள்ள குடிநீர் பகிர்மான குழாய்களை36.23கி.மீ. நீளத்திற்கு மாற்றி அமைத்தல்.
2) 5.80கி.மீ. நீளத்திற்கு குடிநீர் பிரதான குழாய்களை மாற்றி அமைத்தல்
3) 7.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுதல்
4) 8500 எண்ணிக்கைகள் குடிநீர் இணைப்புகளுக்கு MDPE குழாய் மற்றும் FCV–கள் பொருத்துதல்.
5) குடிநீர் வினியோகத்தை சீரான முறையில் வினியோகிக்க FCV/PRV/Diaphragm வால்வுகள் 16 எண்ணிக்கைகள் பொருத்துதல்.

மேற்கண்டப் பணிகள் நடைபெற்று கொண்டிருந்த போது சுமார் 8.00 கி.மீ. நீளத்திற்கு குழாய்கள் அங்கிகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் போடுமாறு வரைபடத்தில் குறிப்பிட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டு அதற்கு பதிலாக வேறு பகுதிகளுக்கு குழாய் அமைக்குமாறு நகர்மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டு 08.06.2016 அன்று தலைமை பொறியாளரிடம் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும் குறிப்பிட்டுள்ள `. 30,56,686.00 DI குழாய் இணைப்பு பொருட்கள் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது மற்றும் மிதமான கடினப் பாறைகளின் அளவீடுகள் மதிப்பீட்டில் உள்ளதை விட கூடுதலாக செய்ய வேண்டியிருந்ததால் அதற்கும் 08.06.2016 அன்று தலைமை பொறியாளரிடம் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணி தற்போது முடிவுறும் நிலையில் உள்ளதால் அனைத்துப் பணிகளுக்குமான அளவுகள் மற்றும் அதற்கான செலவினங்கள் தற்போது கணக்கிடப்பட்டு (As pear work slip attached) கீழ்கண்டவாறு விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | சிப்பம் 1–ற்கான பணியில் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை | `. 128,786,410.70 |
| 2. | ஒப்பந்த தொகை (Bill of Quantities as per aggrement) | 147,224,968.14 |
| 3. | சிப்பம் –1 பணிக்கான மொத்த செலவினம் (As per Execution ) | 153,961,793.00 |

| | |
|---|---|
| சிப்பம் –1 பணிக்கான உத்தேச மொத்த செலவினம் | 153,961,793.00 |
| சிப்பம் 2 ஒப்பந்த தொகை (SCADA system) | 27,214,700.00 |
| | 181,176,493.00 |

மேற்கூறியப் பணிகள் அனைத்தும் தலைமைப் பொறியாளர் அவர்களின் அனுமதி பெற்று திட்டம் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மேற்கண்ட கூடுதல் பணி செய்தமையால் நிர்வாக அனுமதி வழங்கிய தொகையை விட கூடுதலாக 16.14% மேல் செலவிடப்பட்ட பணிக்கான தொகை `. 181,176,493/–க்கு திருத்திய நிர்வாக அனுமதி பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** திருத்திய நிர்வாக அனுமதி பெற மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/4749/13)

**தீர்மானம் எண். 476**

அனுமதிக்கப்பட்டது

(4) இராசிபுரம் நகராட்சியில் அனைத்து பிரிவிலுள்ள கணினி உபகரணங்கள் ஆண்டு பராமரிப்பு செய்யும் `. 150000/– மதிப்பீட்டுப் பணிக்கு 30.11.2018–இல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) M/s. Spyder Technology, Salem - `. 146750/-
2) M/s. Venue Technology, Salem - `. 149450/-

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் வழங்கியுள்ள M/s. Spyder Technology நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** குறைவான விலை விகிதம் வழங்கியுள்ள M/s. Spyder Technology நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(இ1/129/17)

**தீர்மானம் எண். 477**

அனுமதிக்கப்பட்டது

(5) இராசிபுரம் நகராட்சி புதிய அலுவலக கட்டிட கணினி சேவை மைய வசதிகள், அலுவலக மராமத்துப் பணிகள் `. 600000/– மதிப்பீட்டில் செய்ய 30.11.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு ஆர்.எஸ். ரங்கசாமி, ஒப்பந்ததாரர், காட்டூர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 5.21 % அதிகம்
2) திரு ஆ. மதியழகன், ஒப்பந்ததாரர், இரா.பட்டணம், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.02 % குறைவு

மதிப்பீட்டைவிட 0.02 % குறைவான திரு ஆ. மதியழகன், ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.02 % குறைவான திரு ஆ. மதியழகன், ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(இ1/2020/18)

**தீர்மானம் எண். 478**

அனுமதிக்கப்பட்டது

(6) இராசிபுரம் நகராட்சி தட்டான்குட்டை தள உர தயாரிப்பு மையத்தில் சுற்றுச்சுவர், கால்வாய் அமைக்கும் `. 160000/– மதிப்பீட்டுப் பணிக்கு 30.11.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு ஆ. மதியழகன், ஒப்பந்ததாரர், இரா.பட்டணம், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.01 % குறைவு
2) திரு ஆர்.எஸ். ரங்கசாமி, ஒப்பந்ததாரர், காட்டூர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 4.97 % அதிகம்

மதிப்பீட்டைவிட 0.01 % குறைவான திரு ஆ. மதியழகன், ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01 % குறைவான திரு ஆ. மதியழகன், ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(இ1/2247/18)

**தீர்மானம் எண். 479**

அனுமதிக்கப்பட்டது

(7) இராசிபுரம் நகராட்சி குடிநீர் பிரிவு ஈப்பு எண். ட்டி என் 28 க்யூ 8402 ஹெட் வால்வு பழுதடைந்து வாகனம் இயக்க இயலாத நிலையிலுள்ளது. மேற்படி ஈப்பு வாகனத்தை மகேந்திரா விநியோக நிறுவனமான நாமக்கல் M/s. SKS Automobiles நிறுவனத்தில் பழுதுநீக்கம் செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் `. 22000/– நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வாகன பயன்பாட்டின் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வாகன பழுதுநீக்கம் செய்ய அனுமதிக்கலாம்.

(இ2/3266/18)

**தீர்மானம் எண். 480**

அனுமதிக்கப்பட்டது

(8) இராசிபுரம் நகராட்சியில் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத் திட்டத்திற்கு கணினி உபகரணங்கள் விநியோகிக்கும் `. 205000/– மதிப்பீட்டுப் பணிக்கு 30.11.2018–இல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) M/s. Spyder Technology, Salem - மதிப்பீட்டைவிட 0.27 % குறைவு
2) M/s. Venus Technology, Salem - மதிப்பீட்டைவிட 0.30 % அதிகம்

மதிப்பீட்டைவிட 0.27 % குறைவான M/s. Spyder Technology, Salem நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.27 % குறைவான M/s. Spyder Technology ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(இ1/2173/18)

**தீர்மானம் எண். 481**

அனுமதிக்கப்பட்டது

ஒம் /– பெ. நடேசன்,
தனி அலுவலர்

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.